2. தகவல் கோரல்

(அ) சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலை லே-ஆப் செய்யப் பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

*திரு. கே. ரமணி : தலைவரவர்களே ஒரு 'Mention' என்ற முறையில் ஒரு விஷயத்தை நான் கிளப்ப விரும்புகிறேன். வடலூர் சேஷசாயி இன்சுலேட்டர் தொழிற்சாலையில் நீண்ட காலமாக 1600-க்கும் மேற்பட்ட தொழிலாளிகள் வேலையும் சம்பளமும் கிடைக்காத பெரும் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். அரசாங்கத்தினிடத்திலே 600 தொழிலாளர்களை லே-ஆப் செய்ய அனுமதி பெற்று 1,000 பேர்களை லே-ஆப் செய்தும் இப்பொழுது ஒர்க்ஷாப் பகுதியிலே 4 பிரிவுகளை அவர்கள் மூடி விடுவது என்ற முடிவுக்கும் கொண்டுவந்து அந்தத் தொழிற் சாலையையே அநேகமாகச் சீரழித்து, அந்தத் தொழிலாளர்களும் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பல தொழிலாளர்கள் தங்களுடைய கையில் இருக்கிற அற்ப, சொற்ப காசுகளையும், உடமைகளையும் இழந்து பட்டினிக்கு ஆளாகி, ஊரைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தை இந்த அவையிலே கிளப்பி நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களே, அந்த 'லே-ஆஃப்-ஐத் தடுப்பதற்கு நட வடிக்கை எடுப்பதாகச் சொல்லி, அந்த நடவடிக்கைகளுக்குக் கூட அந்த நிர்வாகம் மதிப்புக் கொடுக்காமல் அவர்கள் இஷ்டம் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். 'லே-ஆஃப்-க்கு சட்டப் படி அவர்கள் கொடுக்கின்ற, கொடுக்கவேண்டிய சம்பளத்தைக் கூட 1990-ஆம் வருஷம் ஜுலை மாதத்திலேயிருந்து கொடுக்க வில்லை. அதையும் நிறுத்தி விட்டார்கள். இந்த நிலைமை அங்கே ஏற்பட்டு, அதனால் அந்தப் பகுதி முழுவதும் ஒரு மிகப் பெரிய பதட்டமான நிலைமையும் ஏற்பட்டு, அனைத்துத் தொழிலாளிகளும் பல போராட்டங்களிலேயும் ஈடுபட்டு, ஜனநாயக முறையிலே தங்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முயற்சியெடுத்து அதற்கும் அவர்கள் ஒத்துக்கொள்வதாக இல்லை. இப்படிப்பட்ட மோசமான நிலைமை ஏற்பட்டிருப் பதன் விளைவாக நமது அவையினுடைய மதிப்புமிக்க உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் உடல்நலம் கூடக் குன்றியிருக்கும் படியான நிலையில் அதாவது அந்தச் சங்கத்தினுடைய தலைவ ரான நெல்லிக்குப்பம் கோவிந்தராஜன் அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மிகவும் வேதனைக்குரிய ஒரு விஷயம். இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். எல்லாவிதத்திலும் சட்டத்தை மீறி —நமது முதலமைச்சருடைய வாக்குறுதியைக் கூட நிறைவேற்று வதற்குத் தயார் இல்லாமல் அவர்கள் இஷ்டம் போல நடந்துகொண்டிருக்கும்படியான அந்தத் தொழிற்சாலை நிர் வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை என்ன எடுக்க முடியுமோ

அதை எடுத்து அந்தக் கம்பெனியைச் சீர்குலைக்கவிடக்கூடாது. 1,600 பேருக்கு வேலை கிடைக்கிறது; அப்படியானால் குறைந்த பட்சம் அந்தக் கம்பெனியைக் கூட்டுத்துறையிலேயாவது கொண்டு வர முடியுமா என்று பார்க்கவேண்டும் அல்லது அரசே எடுத்து நடத்த முடியுமா, அதை வேறு எந்தத் துறையிலேயாவது எடுக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். இந்த மேனேஜ்மெண்டிடம் அந்தக் கம்பெனி இருந்தால் இனிமேல் அந்தக் கம்பெனி பிழைக்காது என்ற நிலை வந்திருக்கிறது. அதனால் தான் தோழர் கோவிந்தராஜனே உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்கு ஒரு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன். அந்த வேண்டுகோளுக்கு நமது அமைச்சரவர்கள் பதில் அளிப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன் தங்கள் மூலமாக.

மாண்புமிகு திரு கே. என். நேரு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய பிரச்சினையைப்பற்றி ஏற்கெனவே முதலமைச்சரவர்களிடம் கலந்தாலோசித்து அரசின் சார்பாக ஹியரிங்குகள் நடத்தப்பட்டு அரசிலிருந்து அவர்களுக்கு லே-ஆப் அளிக்கப் பட்டிருந்ததை ரத்து செய்து அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேலை அளிக்கப்படவேண்டுமென்று, முதலமைச்சருடைய உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப் பட்டது. ஆனால், அரசு சொன்ன நடவடிக்கைகள் மீது அவர்கள் இன்றைக்கு நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். இதற்கிடையில் 'லே-ஆப்' விட்ட நாட்களில் கூட அவர்களுக்குத் தரக்கூடிய சம்பளம், அதாவது தொழிலாளர்களுக்குத் தரக்கூடிய அந்தப் பாதிச் சம்பளம்கூடத் தரப்படவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பாக உரிய முறைப்படி நடவடிக்கை மேற்கொண்டு அத்தனை தொழிலாளர்களுக்கும் சம்பளம் கிடைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி, அரசே இந்த ஆலையை எடுத்துக்கொள்வதோ, அல்லது கூட்டுறவுத் துறையிலே இதை எடுக்கலாமா என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்து நல்ல ஒரு முடிவை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-30 மணி.

(ஆ) அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட்டு அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பையில் வழக்கறிஞர் பெருமக்கள் எல்லாம் சப்-கோர்ட் வேண்டுமென்று கடந்த 2, 3 மாத காலமாக நீதிமன்றத்தைப் புறக்கணித்து வருகிறார்கள்.